# உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். ஆதி 12 : 2

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை வாஞ்சையோடு வாசிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

என்னுடைய பெயர் சொல்ல ஒரு குழந்தை இல்லையே என்று கண்ணீரோடு காட்சியளிக்கிறீர்களா ?

அல்லது என்னுடைய பெயர் கெட்டுப் போய்விட்டதே என்று கண் கலங்கி நிற்கிறீர்களா ?

அல்லது பேரோடும் புகழோடும் வாழ முடியவில்லையே என்று அங்கலாய்கிறீர்களா ? பயம் வேண்டாம்.

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

''**உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்**'' – ஆமென். கண் கலங்கும் பொழுதும், உள்ளம் குமுறும் பொழுதும், கர்த்தருடைய வார்த்தையையே சிந்தியுங்கள். கட்டாயமாக உன் பேரைப் பெருமைப்படுத்துவார்.

அநேக கர்த்தருடைய பிள்ளைகள் எங்களுக்கு எழுதும் தபால்களில் தங்கள் பிள்ளைகளுக்கு பெயர் கொடுக்கவேண்டும். அல்லது நான் ஞானஸ்நானம் பெறப்போகிறேன். எனக்கு ஒரு நல்ல பெயர் எழுதுங்கள் என்கிறார்கள்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே, விசவாசத்தினாலே, நீங்களும் உங்களுக்கு பிறக்கப்போகும் குழந்தைக்கு ஒரு பெயர் இப்பொழுதே சூட்டலாமே. பிள்ளையற்றிருந்த சில கர்த்தருடைய பிள்ளைகள், தங்கள் கற்பகனிகளுக்கு கொடுத்த பெயர்களை முதலாவது உங்களுக்கு எழுதுகிறேன். ஜெபத்துடன் படியுங்கள்.

அத்துடன், விசுவாசத்தினாலே, கர்த்தர் உங்களுக்கு கொடுக்கப்போகும் குழந்தையை இப்பொழுதே கர்த்தருடைய ஊழியத்திற்கு ஒப்புக் கொடுங்கள்.

வேதம் சொல்கிறது, நீ விசுவாசிக்கிறபடியே உனக்கு ஆகக்கடவது – என்பதாக.

அன்னாள் சொல்லுகிற வார்த்தையைக் கேளுங்கள்:

**''சாமுவேல் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனை கர்த்தருக்கே ஒப்புக் கொடுக்கிறேன்.'' 1 சாமு 1 : 28** – என்பதாக.

**இந்த வசனத்தை மறக்கவே வேண்டாம்.**

தொடர்ந்து சில பெயர் பட்டியலை குறிப்பிடுகிறேன்.

1. ஆபிரகாம் தனக்கு சாராள் பெற்ற குமாரனுக்கு **''ஈசாக்கு''** என்று பேரிட்டான். ஆதி. 21 : 3.

   ஈசாக்கு என்றால் **''நகைப்பு''** என்று அர்த்தமாம். ஏனெனில் ஆபிரகாம் 100 வயதாயிருந்தபோது பெற்றான்.

2. ஈசாக்கு ரெபேக்காளை 40 வயதில் விவாகம் பண்ணினான். 19 வருடம் கழித்து, 60 வது வயதில், ஏசா, யாக்கோபு என்ற இரட்டைப் பிள்ளைகள் பிறந்தார்கள்.

   ஏசா என்றால் ''**ரோமமுள்ளவன்**'' என்று அர்த்தமாம். யாக்கோபு என்றால் **''தட்டி விழுத்துவோன்''** என்று அர்த்தமாம்.

3. ராகேல் யாக்கோபிடம், எனக்கு பிள்ளை கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள். அப்பொழுது யாக்கோபு ராகேலின் மேல் கோபங்கொண்டு, தேவனல்லவா உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார். நான் தேவனா என்றான். தேவன் ராகேலை நினைத்தருளினார். யோசேப்பை பெற்றெடுத்தாள்.

   யோசேப்பு என்றால் ''**பெருக்கம்**'' என்று அர்த்தமாம்.

4. எல்கானாவுக்கும் அன்னாளுக்கும் பிறந்தவன் தான் ''சாமுவேல்''.

   சாமுவேல் என்றால் **''தேவனால் கேட்கப்பட்டவன்''** என்று அர்த்தமாம்

5. மனோவா மனைவி சிம்சோனைப் பெற்றெடுத்தாள்.

   சிம்சோன் என்றால் **''சூரியனைப் போன்றவன்''** என்று அர்த்தமாம்.

6. சூனேமியாள் புருஷன் வயது சென்றவன். ஆனால் தீர்க்கரிசி வார்த்தையின்படி உற்பத்திகாலத் திட்டப்படி ஒரு குமாரனைப் பெற்றாள்.

7. சகரியா எலிசபெத்துக்கு தூதன் சொன்னபடியே **''யோவான்''** பிறந்தார்.

   யோவான் என்றால் **''ஸ்நானகன்''** என்று அர்த்தமாம்.

என் அன்பு சகோதரனே சகோதரியே, தேவன் உங்களுடைய பெயரை மாத்திரமல்ல; உங்கள் பிள்ளைகளின் பெயரையும் பெருமைப்படுத்துவார்.

கர்த்தருக்கு உண்மையாய் ஜீவித்தும், நீங்கள் நன்மை செய்தும் உங்கள் பெயர் சந்தர்ப்பம் சூழ்நிலையிலே கெட்டுப்போய்விட்டதோ! கலங்கவேண்டாம்.

தேவனுடைய வார்த்தை உங்களுக்காகவே கடந்து வருகிறது.

**''உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்''**

**''நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்''** ஆமென்.